**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 103/2019 |
| | | D/W's | : | **DW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | அழகு | CASTE | : | |
| S/O | சோத்தான் (லேட்) | RELIGION | : | இந்து |
| VILLAGE | கோடாங்கிப்பட்டி | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 64 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.02.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி சோத்தான்தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. பிச்சன்அம்பலம் என்பவர் எனக்கும் வாதிக்கும் தாத்தா என்றால் சரிதான். 1992 முதல் 2002 வரை எனது மற்ற சகோதரர்களும் நானும் வாதியும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்று ஞாபகமில்லை.

2. எனது மனைவி பெயரில் 2002 முன்பு வரை எந்த சொத்தும் வாங்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வழக்கின் 2ம் இலக்கச்சொத்து நாச்சியப்ப தேவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாச்சியப்ப தேவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1989ல் 2ம் இலக்கச்சொத்தில் அனுபவத்தில் இருந்தவர்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. 2ம் இலக்கச் சொத்தை சோத்தான்தான் அவர் இறக்கும் வரை அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. 2ம் இலக்கச்சொத்தைப்பொறுத்து எனது அப்பா ஆவணம் எதுவும் எழுதிவைக்கவில்லை. வாதி 2ம் இலக்கச்சொத்தை பங்கு கேட்டுதான் வழக்குபோட்டுள்ளார் என்றால் அந்த சொத்துக்கும் எனது குடும்பத்திற்கும் சம்பந்தமில்லை, அது நாச்சியப்பத்தேவருக்கு சொந்தமானது. நாச்சியப்பத்தேவர் அவர் உயிருடன் இருக்கும்வரை எங்களை வெளியேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. நானும் வாதியும் சேர்த்த சம்பாத்தியத்தில் வத்திப்பட்டி, ரெட்டியப்பட்டி சொத்துக்கள் வாங்கினோம் என்றால் சரியல்ல. வீரணன் எனது மைத்துனர். வீரணனிடமிருந்து நான் சொத்துக்களை வாங்கினேன் என்றால் சரிதான். 2003 ம் வருடம் வாதிக்கும் எனக்குமிடையே சொத்து பரிவர்த்தனை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. குடும்பத்தில் பிரச்சனை ஏற்பட்டவுடன் சொத்தை பிரித்துதருமாறு வாதி 1ம் பிரதிவாதிக்கும் எனது மகனுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு எந்த பதிலும் அனுப்பவில்லை என்றால் ஞாபகமில்லை.

5. வா.சா.ஆ.2 கிரையப்பத்திரத்தில் உள்ள சொத்துக்களின் மூலப்பத்திரங்கள் 8ம் பிரதிவாதியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. 8ம் பிரதிவாதியை தவிர மற்ற பிரதிவாதிகள் எனக்கும் வாதிக்கும் ஏற்பட்ட சொத்து பரிவர்த்தனை பற்றி சாட்சி அளிப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 7ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் சீர் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனது சகோதரிகளுக்கு சொத்தில் பாகம் கொடுக்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் பணமாக பெற்றுக்கொண்டார்கள்.

6. எனது சகோதரிகளுக்கு சொத்திற்கு பதிலாக பணம் கொடுத்ததாக நிரூபண வாக்குமூலத்திலும் எதிர்வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 2ம் இலக்கச்சொத்தில் 4ம் பிரதிவாதிக்கும் 7ம் பிரதிவாதிக்கும் தலா 2.5 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 2ம் இலக்கச்சொத்தில் வாதிக்கு பங்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை.

7. எதிர்வழக்குரையில் நாங்கள் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு செய்தவிவரம் தெரிந்துகொண்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தததாக பொய்யாக சொல்லியுள்ளோம் என்றாலும் நாங்கள் மனு தாக்கல் செய்வதற்குமுன்பே வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாட்சியர் உத்தரவுக்கு எதிராக வாதி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.

8. 2003ல் 1ம் பிரதிவாதி எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் வழக்குச்சொத்துக்கள் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்கில் 1ம் இலக்கச்சொத்து எனது தாத்தா சொத்து என்றாலும் அதில் வாதி பங்கு கேட்கிறார் என்றாலும் அதில் நான் ஆட்சேபணை செய்ய முடியாது என்றாலும் சரிதான், அதில் எனக்கும் பங்கு உள்ளது. 1ம் இலக்கச்சொத்தை எனது அப்பா 8ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தனிப்பட்ட உரிமையில்லை என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தைத்தான் சட்டவிரோதம் என்பதால் செல்லாது என்று விளம்புகை செய்யும்படி வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

9. வாதி கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.